


**06. 08. 2026**

தலைப்புச் செய்திகள்

1. தமிழக சட்டப்பேரவையில் நடப்பு நிதியாண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கையை மாநில வேளாண் அமைச்சர் திரு. வினோத் இன்று தாக்கல் செய்தார்.

திருச்சி உட்பட 8 இடங்களில் வேளான் விரிவாக்க மையங்கள் ஏற்படுத்தப்படும்,

மகளிருக்கான வெற்றி வான் மகளிர் திட்டம் இந்தாண்டு தொடங்கப்படும்,

தமிழ்நாட்டில் மூன்று இடங்களில் விதை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் உள்ளிட்ட அறிவிப்புகள் இதில் இடம்பெற்றுள்ளன.

2. தமிழகத்தின் வளர்ச்சியையும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தும் வகையில் பொதுபட்ஜெட்டும், வேளாண் பட்ஜெட்டும் திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு.விஜய் பாராட்டியுள்ளார்..

3. ஆடி கிருத்திகை விழா முருகப்பெருமான் ஆலயங்களில் இன்று பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படுகிறது.

4. கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு இந்தியாவின் தன்வி ஷர்மா, அஷ்மிதா சாலிகா ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

இனி விரிவான செய்திகள்

*************

வேளாண் பட்ஜெட்

திருச்சி திருவண்ணாமலை வேலூர் விருதுநகர் தேனி தூத்துக்குடி கோயம்பத்தூர் மாவட்டங்களில் 27 கோடியே 82 லட்ச ரூபாய் மதிப்பீட்டில், 8 வேளான் விரிவாக்க மையங்கள் ஏற்படுத்தப்படும் என்று வேளான்துறை அமைச்சர் திரு.வினோத் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் வேளான் நிதிநிலை அறிக்கையை இன்று தாக்கல் செய்து பேசிய அவர், 300 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்குகளுடன் இவை அமைக்கப்படும் என்றார்.

வாய்ஸ்

மண்வளத்தை பாதுகாக்க ரசாயன உரப் பயன்பாட்டை குறைத்து திரவ உயிர் உரங்கள் திட்டத்தை செயல்படுத்த நான்கரை கோடி ரூபாய் ஒதுக்கீடு,

மண்வளத்தை மீட்டெடுக்கும் வகையில் ஒரு லட்சம் ஏக்கருக்குத் தேவையான பசுந்தாள் உரம் வழங்கப்படும் என்றார்.

மக்காச்சோள உற்பத்தியை அதிகரிக்க 36 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம்

விவசாயிகளுக்கு விருதுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் .

ஒரு லட்சம் விவசாயிகளுக்கு 4 கோடி மதிப்பில் மண் நல அட்டைகள் வழங்கப்படும்,

விவசாயிகளின் அனைத்து தேவைகளையும் ஒரே முகவரி திட்டத்தின் கீழ் வழங்க நடவடிக்கை,

பனைப் பாதுகாப்பு இயக்கத்திற்கென 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு,

10 கோடி ரூபாய் செலவில் நிரந்தர மண்புழு உரக்கூடம் அமைக்கப்படும் என்றும் கூறினார்.

சிறு குறு விவசாயிகளுக்கு மாநில அளவில் பயிர் விளைச்சல் போட்டி நடத்தி மக்கள் சேவகர் அஞ்சலை அம்மாள் விருது வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

காட்டுப்பன்றிகளால் ஏற்படும் பயிர் பாதிப்பைத் தடுக்க 7 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டம்,

நஞ்சில்லாத உணவு உற்பத்திக்கான, புதிய இயற்கை வேளான் தொகுப்பை உருவாக்க 9 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு,

வீட்டுத்தோட்டம் திட்டத்திற்கு 10 கோடி ரூபாய்,

தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க 41 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு

சிறந்த உயிர்ம விவசாயிகளுக்கான நம்மாழ்வார் விருது 5 பேருக்கு வழங்க 11 லட்ச ரூபாய் ஒதுக்கீடு

குறு தானிய இயக்கத்திற்கென 7 கோடி ரூபாய் ஒதுக்கீடு

மத்திய மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் 9 கோடி ரூபாய் செலவில் புதிய இயற்கை வேளாண்மை தொகுப்பு எற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளையும் வெளியிட்டார்.

தமிழ்நாடு விவசாயிகள் மேம்பாட்டு ஆணையம் 23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையை தலைமையிடமாக கொண்டு செயல்படும் என்றும், 15 இடங்களில் வேளாண் இயந்திரங்கள் பழுதுநீக்கி பராமரிக்கும் மையங்கள் செயல்படும் என்றும் தெரிவித்தார்.

வேளாண் பொறியியல் விரிவாக்க பயிற்சி மையங்கள் நான்கு கோடியே 60 லட்ச ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்றார்.

மகளிருக்கான வெற்றி வான் மகளிர் திட்டம் இந்தாண்டு தொடங்கப்படுவதாகவும் ட்ரோன் இயக்குதல் நவீன பயிர் உற்பத்தி, உரம் தெளிப்பு பயிர் கண்காணிப்பு உள்ளிட்ட பயிற்சிகள் மகளிருக்கு வழங்கப்படும் என்றும் கூறினார்.

சூரியசக்தி பம்பு செட்டுகள் ஆயிரம் விவசாயிகளுக்கு மானியத்துடன் வழங்கப்படும்,

கடற்கரை ஓர தோட்டக்கலையினை உருவாக்க நீல தோட்டக்கலை பூங்காக்கள் அமைக்கப்படும்,

100 இடங்களில் தோட்டக்கலை விற்பனை நிலையங்கள் 5 கோடி செலவில் அமைக்கப்படும், என்றார்.

திருவள்ளூர் மாவட்டம் புட்லூர் பகுதியில் மரச்செடிகள் மரங்கள் உள்ளிட்டவைகளை வளர்ப்பதற்காக 7 கோடி ரூபாயில்

5 ஆண்டு திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் வினோத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் தற்போது செயல்பாட்டில் இருந்து விவசாயிகளுக்கு பயனளித்து கொண்டிருக்கும் திட்டங்கள் தொடரப்படுவதோடு பல புதிய திட்டங்களும் அறிமுகப்படுத்தப்படுவதாக கூறினார்.

டெல்டா, டெல்டா அல்லாத மாவட்டங்களுக்கு 134 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குறுவை தொகுப்பு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்றும்,

100 சதவிகிதம் பயிர் காப்பீடு மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

டெல்டா பகுதிகளில் 2 ஆயிரத்து 509 கிலோ மீட்டர் வாய்க்கால்கள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூர் வாரப்பட்டுள்ளதாகவும்,

பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் மாநில அரசின் சார்பில் 648 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

8 லட்சத்து 26 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 100 சதவிகிதம் பயிர் காப்பீடு மேற்கொள்ளப்படும்,

விவசாயிகளுக்கான இலவச மும்முனை மின்சாரத்திற்கு 7 ஆயிரத்து 432 கோடி ரூபாய் ஒதுக்கீடு,

மண்ணின் வளத்தை பாதுகாக்கும் வகையில் நுண்ணுயிர்களை காக்க மண்வள பாதுகாப்பு இயக்கம் 600 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படும்.

நடப்பாண்டு உயிர்ம வேளாண்மை பரவலாக்க சிறப்பு திட்டத்தின் கீழ் 20 ஆயிரம் ஏக்கருக்கு தலா நான்காயிரம் ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.

125 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உயிர்ம வேளாண் பரவலாக்க சிறப்பு திட்டத்திற்கு 8 கோடி ரூபாய் ஒதுக்கீடு,

மண்புழு உரக்கூடம் அமைக்க 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை அமைச்சர் வெளியிட்டார்.

தமிழகத்தில் 3 இடங்களில் தலா 250 மெட்ரிக் டன் விதை சேமிப்பு கிடங்குகளுடன் கூடிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என அமைச்சர் திரு.வினோத் தெரிவித்தார்.

2036 ஆம் ஆண்டிற்குள் ஒன்றரை ட்ரில்லியன் டாலர் என்ற அரசின் இலக்கை எட்டுவதற்கான தொலை நோக்கு திட்டங்களுக்கு இந்த பட்ஜெட் வழிகோலும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

*************

முதலமைச்சர்

தமிழகத்தில் நடப்பு நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் குழந்தைகள் மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களின்

முன்னேற்றத்திற்கு வகை செய்வதாக முதலமைச்சர் திரு.விஜய் கூறியுள்ளார்.

வேளாண் நிதிநிலை அறிக்கை விவசாய தொழில்சார்ந்த பிரிவுகளையும் மதிப்பு கூட்டுதல் போன்ற தொழில்களையும் மேம்படுத்தி வேளாண் பெருமக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாக தமது சமூக வலைதள பதிவில் அவர் கூறியுள்ளார்.

*************

நாடாளுமன்றம்

நீட் விவகாரம் உள்ளிட்ட பல பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் வரை இன்று ஒத்திவைக்கப்பட்டன.

மாநிலங்களவை இன்று கூடியதும், வர்த்தகம், தொழில், ரசாயனம் உரத்துறை சார்ந்த நாடாளுமன்ற நிலைக்குழுவின் அறிக்கை, அவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து அவைத்தலைவர், திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் பூஜ்ஜிய நேரத்தை எடுத்துக்கொள்ள முயன்றபோது, நிலவிய அமளியால், அவை முதலில் நண்பகல் வரையிலும் பின்னர் பிற்பகல் வரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

மக்களவையில் அவைத்தலைவர் திரு.ஓம் பிர்லா கேள்வி நேரத்தை எடுத்துக்கொள்ள முயன்றபோது நீட் விவகார பிரச்சனையில் அமளி நிலவவே அவை பிற்பகல் இரண்டு மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

*************

சர்பானந்த சோனோவால்

நாட்டின் துறைமுக பாதுகாப்பு சூழல்கள் வேகமாக மாறி வருவதாக மத்திய துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தேசிய துறைமுகம் பாதுகாப்பு சார்ந்த மாநாட்டில் உரையாற்றிய அவர், துறைமுக பாதுகாப்பு தேசத்தின் அனைத்து மாநிலங்களின் பங்களிப்புடன் கூடிய பொறுப்பு என்று சுட்டிக்காட்டினார்.

கடல்சார் சவால்களை எதிர்கொண்டு துரிதமாக செயலாற்ற ஒருங்கிணைந்த நடவடிக்கைகளின் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்..

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் சீரிய தலைமையில் நம் நாடு உலகளாவிய கடல்சார் ஆற்றல் மிகு தேசமாக உருவெடுத்துள்ளது என்று கூறிய அவர், நம் நாட்டின் துறைமுகங்கள் விரிவடைந்து தளவாட தொடர்புகள் ஒருங்கிணைக்கப்பட்டு புதிய கடல்சார் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

துறைமுக முனையத்தின் கட்டுமானத்தின்போதே அதன் வடிவம், தொழில்நுட்பம், செயல்பாடு போன்றவற்றை திட்டமிட்டு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

துறைமுக பாதுகாப்பிற்கான ஒருங்கிணைந்த முகமையின் அவசியத்தையும் சுட்டிக்காட்டிய அமைச்சர், இதன்மூலம் தயார்நிலைகளை மேம்படுத்தி பாதுகாப்பை விரிவுபடுத்த முடியும் என்றார்.

*************

பிரல்ஹாத் ஜோஷி

பிரதமரின் இல்லந்தோறும் சூரிய மின் சக்தி திட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 50 லட்சத்தையும் தாண்டியுள்ளதாக மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு.பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்திய தொழில் கூட்டமைப்பின் சர்வதேச எரிசக்தி மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், இதனால் 19 லட்சம் குடியிருப்புகளில் மின் கட்டணம் வெறும் பூஜ்ஜியமாக உள்ளதாக குறிப்பிட்டார்.

இந்த திட்டத்தின் கீழ் 12 லட்சம் வீடுகளில் உள்ளவர்கள் கூடுதல் மின்சாரத்தை விற்றதன் மூலம் 421 கோடி ரூபாய் வருமானம் ஈட்டியிருப்பதாகவும் எடுத்துரைத்தார்.

புதை படிவம் இல்லாத மின் திறன் பாதையில் இன்னும் நான்காண்டுகளில் 500 ஜிகா வாட் மின் உற்பத்தி இலக்கு எட்டப்பட்டு விடும் என்றும் அமைச்சர் கூறினார்.

*************

ஆடி கிருத்திகை

ஆடி கிருத்திகை விழா முருகப்பெருமான் ஆலயங்களில் இன்று பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படுகிறது.

தஞ்சை சுவாமிமலை சுவாமிநாதசுவாமி ஆலயத்தில் ஏராளமான பக்தர்கள் இன்று அதிகாலை முதலே நீண்ட வரிசையில் நின்று சுவாமி தரிசனம் செய்வதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலிலும் லட்சக்கணக்கான பக்தர்கள் பால்காவடி, புஷ்பகாவடி மயில் காவடியுடன் முருகப்பெருமானை தரிசித்தனர்.

இதனிடையே ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோவில் ஆடிப்பூர தேரோட்ட விழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

*************

நெல்லை

நெல்லை காரையாறு அருள்மிகு சொரிமுத்து அய்யனார் திருக்கோவில் ஆடி அமாவாசை விழா முன்னேற்பாட்டு பணிகளை ஒட்டி பல்வேறு கட்டுப்பாடுகளை வனத்துறை விதித்துள்ளது.

இதன்படி நாளை தொடங்கி வரும் 16ஆம் தேதிவரை அகஸ்தியர் அருவி பகுதிக்கு செல்ல பொதுமக்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*************

பேட்மிண்டன்

கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு இந்தியாவின் தன்வி ஷர்மா அஷ்மிதா சாலிகா ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் கிருஷ்ண பிரசாத், கிருஷ்மூர்த்தி ராய் இணை – தென்கொரிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது